1974 சனவரி 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

வந்தவாசியில் சுற்றுலா மாளிகை

* 65 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சரித்திரப் பிரசித்தி பெற்ற வந்தவாசி கோட்டையைக் காணவரும் உல்லாசப் பயணிகள் வசதிக்கென அங்கு ஒரு சுற்றுலா மாளிகை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, வந்தவாசி சரித்திரத்தில் மிகவும் புகழ்பெற்ற இடம். அங்கே ஒரு பாழடைந்த கோட்டை இருக்கிறது. தெள்ளாறு என்ற இடத்தில் பல்லவன் காலத்து குகைக்கோயில் இருக்கிறது. எனவே அங்கு வரும் பயணிகளுக்கு வசதியாக சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு இனியாவது முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வந்தவாசியில் கோட்டையின் பழமையையும், வரலாற்றுச் சிறப்பான பகுதிகளையும் காப்பாற்றுவதில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் சுற்றுலா மாளிகை கட்டும் அளவிற்கு இன்றியமையாமை ஏற்படுகிறதா என்று பார்க்கும்பொழுது வரும் பயணிகள் அங்கே தங்குகிறார்களா அல்லது நின்று பார்க்கிறார்களா அல்லது ஓட்டத்திலேயே பார்க்கிறார்களா என்ற அடிப்படையில் சுற்றுலா மாளிகை ஏற்படும். திருச்செந்தூருக்கு ஏராளமான பேர் வருகிறார்கள் என்றால், சுற்றுலா மாளிகை கட்டி போதுமான அளவில் யாரும் தங்காத அளவிற்கு அங்கே ஏன் கட்டினோம், திருநெல்வேலி, பாளையங்கோட்டையிலே கட்டியிருக்கலாமே என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே வந்து தங்கும் பயணிகள், இருக்கின்ற நேரம் ஆகியவைகளைக் கொண்டு கட்ட வேண்டியவர்களாக

இருக்கிறோம். ஆனால் வந்தவாசியில் கோட்டையின் பழமையையும், வரலாற்றுச் சின்னங்களையும் காப்பாற்றும் அளவில் தொல் பொருள் ஆராய்ச்சித் துறை ஈடுபட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அமைச்சரின் அறிக்கை.

ஒரு துணை வினாவிற்கான விடையைத் திருத்தி கல்வி-சுற்றுலா அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 32- விதியின் கீழ் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நேற்று கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள், 'தமிழ்நாட்டு வரலாற்றை எழுதிப் புதைத்து வைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?' என்று தமிழ்நாட்டு வரலாற்றைப் பதிப்பிக்கும் நோக்கம் இருக்கிறதா ? என்று கேட்கிறார் என்று எண்ணிக்கொண்டு 'இந்தக் குழுவின் பணியே அதுதான்' என்று விடையிறுத்தேன். ஆனால் எல்லாப் பத்திரிகைகளிலும் கேள்வி ஒன்றாகவும், நான் சொன்ன பதில் வேறொன்றாகவும், வினாவுக்கும் விடைக்கும் தொடர்பு இல்லாத முறையிலே வெளியிடப்பட்டிருப்பதால் அதுபற்றித் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வரலாற்றை எழுதுவது வெளியிடுவதற்கே தவிர, புதைத்து வைப்பதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் கேள்வி கேட்டிருப்பதிலும் அவர் 'இந்திய சரித்திரத்தை எழுதி மத்திய அரசினர் புதைத்து வைத்திருக்கிறார்களே' என்பதிலும் உண்மை இல்லை. 1947-ம் ஆண்டு முதல் இதுவரை சிறப்பான வரலாற்றுக் குறிப்புகளை எழுதி வைத்து வேறுபல பொருள்களையும்